www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com

**6- STD** **மூன்றாம் பருவ நிறைவுத் தேர்வு - 2024** பதிவு எண்.

நேரம்: 2.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 60

**அ. பலவுள் தெரிக** 6 x 1 = 6

1. காளிதாசன் தேனிசைப் பாடல்கள் எதிரொலிக்கும் இடம் ______
அ) காவிரிக்கரை ஆ) கங்கைக்கரை இ) வைகைக்கரை ஈ) யமுனைக்கரை
2. காந்தியடிகளிடம் உடை அணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர் ______
அ) கோவை ஆ) சிதம்பரம் இ) மதுரை ஈ) தஞ்சாவூர்
3. "சோம்பல்" என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்ச்சொல் ______
அ) துன்பம் ஆ) சுறுசுறுப்பு இ) அழிவு ஈ) சோகம்
4. வாழ்வில் உயர கடினமாக ____ வேண்டும்
அ) உழைக்க ஆ) நடக்க இ) சிரிக்க ஈ) பேச
5. மணிமேகலை கையில் இருந்த அமுதசுரபியில் உணவு இட்ட பெண் ______
அ) சித்திரை ஆ) காயசண்டிகை இ) தீவதிலகை ஈ) ஆதிரை
6. புத்தரின் வரலாற்றைக் கூறும் நூல் ______
அ) நவஜோதி ஆ) ஜீவன்ஜோதி இ) ஆசியஜோதி ஈ) ஜீவஜோதி

**ஆ. பொருத்துக :** 4 x 1 = 4

7. வள்ளலார் - ஜி.யு.போப்
8. இலக்கியமாநாடு - பசிப்பிணிபோக்கியவர்
9. தமிழ்க்கவிஞர் - சென்னை
10. தமிழ்க்கையேடு - பாரதியார்

**இ. ஏதேனும் 5 வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடையளி** 5 x 2 = 10

11. காந்தியடிகள் மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குள் முதலில் ஏன் நுழையவில்லை?
12. சொல் என்றால் என்ன?
13. யாருக்குத் தொண்டு செய்ய வேண்டும்?
14. தாராபாரதி கவிதையின் இடம்பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
15. பிற உயிர்களை எவ்வாறு காப்பாற்ற வேண்டும்?
16. யாரால் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது?
17. உள்ளதை உள்ளவாறு கூறும் அணியின் பெயர் யாது?

**ஈ. ஏதேனும் 3 வினாக்களுக்கு ஓரிரு தொடர்களில் விடையளி** 3 x 4 = 12

18. எல்லா உயிர்களும் மகிழ்வோடு வாழப் புத்தர்பிரான் கூறும் அறிவுரைகள் யாவை?
19. காந்தியடிகளின் உடைமாற்றத்திற்குக் காரணமாக அமைந்த நிகழ்வினை எழுதுக.
20. பராபரக்கண்ணியில் தாயுமானவர் கூறுவன யாவை?
21. மணிமேகலை மன்னரிடம் வேண்டியது யாது?
22. அறுவகைப் பெயர்ச்சொற்களை எழுதுக.

**உ. அடிபிறழாமல் எழுதுக.** 2 + 4 = 6

23. "இன்னா செய்தாரை" - எனத் தொடங்கும் குறளை அடி மாறாமல் எழுது.
24. "புல்வெளி" - எனத் தொடங்கும் பாடலை அடி மாறாமல் எழுது

**ஊ. அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 10 x 1 = 10

25. அகரவரிசைப்படுத்துக:
பூமி, புதுமை, பேருந்து, பழங்கள், பின்னிரவு, பீலி, பாரதம், பெண்கள்
26. கலைச்சொல் தருக: Patriotism
27. சொற்றொடரில் அமைத்து எழுதுக. செடிகொடிகள்



CamScanner

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

28. இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.
எனைத்தானும் யார்க்கும் எஞ்ஞான்றும் மனத்தானாம்
மாணாசெய் தலை யாமை
29. கீழ்காணும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.
ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது
30. சொற்களை இணைத்து புதியசொற்களை உருவாக்கு:
1. பந்து ______ 2. வான் ______
31. இருபொருள் தருக. 1. ஆறு 2. திங்கள்
32. உன்பொறுப்புகள் வீட்டிலும், பள்ளியிலும் ஏதேனும் ஒன்று எழுது?
33. கீழ்காணும் பாடலில் உள்ள எதுகை, மோனை, இயைபை எழுதுக.
உப்புப் பாரம் ஏத்தும் வண்டி
உப்பிலிப் பாளையம் போகும் வண்டி
34. ஒலிவேறுபாடறிந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக.
மனம் - மணம்

**எ. எவையேனும் ஒரு வினாவிற்கு விடையளி** **1 x 6 = 6**

35. வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்டெடுத்த நிகழ்வை விளக்குக?
36. பாதம் என்ற சிறு கதையைச் சுருக்கி எழுதுக.

**ஏ. கடிதம் / கட்டுரை எழுதுக.** **1 x 6 = 6**

37. நூல்கள் அனுப்ப வேண்டி பதிப்பகத்தாருக்குக் கடிதம் எழுதுக.
38. அறம் செய்ய விரும்பு - என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

www.Padasalai.Net



CamScanner

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com